# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஏழாவது கூட்டத் தொடர்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

----

### மொத்த வினாக்கள் 10

----

### நீர்த்தேக்கம்

*259 **திரு. க. கார்த்திகேயன் (ரிஷிவந்தியம்):**

மாண்புமிகு **நீர் வளங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- சங்கராபுரம் ஒன்றியம், முசுகுந்தா ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க அரசு முன்வருமா?

----

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*260 **திரு. தா. உதயசூரியன் (சங்கராபுரம்):**

மாண்புமிகு **நகராட்சி நிருவாகம்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- சின்னசேலம் பேரூராட்சி, காந்தி நகர், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

----

### ஆய்வு மாளிகை

*261 **திரு. V.P. கந்தசாமி (சூலூர்):**

மாண்புமிகு **பொதுப் பணி** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) சூலூர் தொகுதி, கணியூர் ஊராட்சியில் ஆய்வு மாளிகை கட்ட அரசு முன்வருமா?ஆ) ஆம் எனில், எப்போது?

----

## பேரிடர் கால மீட்பு வாகனங்கள்

*262 **திரு. கு. பிச்சாண்டி (கீழ்பெண்ணாத்தூர்):**

மாண்புமிகு **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- பேரிடர் மீட்புப் பணிகளுக்குத் தேவைப்படும் கனரக வாகனங்களை உள்ளூர் கொள்முதல் அல்லது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அரசு முன்வருமா?

----

## புதிய குடியிருப்புகள்

*263 **திரு. இரா. அருள் (சேலம் மேற்கு):**

மாண்புமிகு **இயற்கை வளங்கள் துறை அமைச்சர்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- சேலம் மத்திய சிறை வளாகத்தில் உள்ள பழுதடைந்த குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

----

## பன்னோக்கு வணிக வளாகம்

*264 **திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா (விருகம்பாக்கம் ):**

மாண்புமிகு **வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு & ஆயத்தீர்வை துறை** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- விருகம்பாக்கம் தொகுதி, 136-வது வார்டு, ராஜமன்னார் சாலையில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் பன்னோக்கு வணிக வளாகம் கட்ட அரசு முன்வருமா?

----

## பகுதிநேர நியாயவிலைக் கடை

*265 **திரு. ரூபி ஆர். மனோகரன் (நாங்குநேரி):**

மாண்புமிகு **கூட்டுறவு** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) நாங்குநேரி தொகுதி, உன்னங்குளம் ஊராட்சி, குசவன்குளம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா? ஆ) ஆம் எனில், எப்போது?

----

## தொழிற்சாலை

*266 **திருமதி கு. சித்ரா (ஏற்காடு):**

மாண்புமிகு **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- ஏற்காட்டில் காபி தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

----

## ஆரம்ப சுகாதார நிலையம்

*267 **திரு. கடம்பூர் ராஜூ (கோவில்பட்டி):**

மாண்புமிகு **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- கோவில்பட்டி தொகுதி, கயத்தார் ஊராட்சி ஒன்றியம், வானரமுட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

----

## திருமண மண்டபம்

*268 **திரு. மு. பன்னீர்செல்வம் (சீர்காழி):**

மாண்புமிகு **இந்து சமய மற்றும் அறநிலையங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- சீர்காழி தொகுதி, நாங்கூர், அருள்மிகு நாராயணப் பெருமாள்

திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

----

**சென்னை**-600009.
15 **அக்டோபர்**, 2025.

**முனைவர் கி. சீனிவாசன்**,
**முதன்மைச் செயலாளர்**